# "ஜோன் குரூஸ்"

## ஓர் இந்து வாலிபன்

## கிறிஸ்துவனான

## விதம்.

ஓர் சுதேசக்கிறிஸ்துவரால் எழுதப்பெற்றது.

(இதன் சுதந்திரம் காக்கப்பட்டுள்ளது)

பிரசுரித்து விற்பனை செய்பவர்

செ. மலையப்பன்.

...on Printing Works, Madras.

# முன்னுரை.

உரை நடையில் தமிழ் நூல்களை எழுதத் தொடக்கி விட்டோர் தத்துவ போதகர் ஆதியாம் சத்திய மறைக் குருக்களே. அச்சியந்திர உபாயத்தை முதற்கண் இந்தியாவிற்குக் கொண்டு வந்தோரும் அவர்களே. அப்பால், உலக வியவகாரங்களைக் கண் முன் நடந்தேறுவனபோலச் சொற்களாற் சித்திரித்துக் காட்டப்படுகின்ற "நாவல்" அல்லது நவீனகக் கற்பனைக் கதைகளைத் தமிழில் முதன் முதற் புனைந்தோரும் வேதநாயக விற்பன்னர் ஆதியாம் மெய் வேத பக்தர்களே. இங்ஙனமாயினும், தற்காலம் பிறசமயிகள் தாம் நவீனங்களை நூற்றுக்கணக்காக இயற்றி அச்சேற்றி மலியப் பொலியப்பரப்பி வருகின்றார்கள். சத்தியவேதத் தவர்களும் பலகால் அவற்றையே வாங்கிப் படிக்க ஏவப்படுமாறு எம்மவருள் அவ்வித நூலியற்றுவோரும் பிரசுரிப்போரும் பூச்சியமாய் அருகிப் போயினர். ஆகவே இந்நாட்களில் உத்தம கத்தோலிக்க ஆசிரியர் சில்லோர் வெளிப்பட்டு தமிழ் கத்தோலிக்க நவீனக விஷயமாய் உண்டான குறையை நிவர்த்திக்கத் தொடங்கி யிருப்பது எல்லார்க்கும் திருப்தி காமேயாகும்.

தற்போது ஸ்ரீ மலையப்பன் அவர்கள் இயற்றி வெளிப்படுத்துகின்ற "குருஸ்" எனும் பெயரிய நூல் சரியாய்க் கூறுமிடத்து ஒரு நவீனகம் அன்று, நடபடியான சீவிய சரிதையேயாம். ஆயினும் நவீனகத்துக்குரிய சில அங்கங்கள் இதனில் பொருந்தியிருக் கின்றமையால் இதுவும் அந்நிரையிலுள்ள நூல்களைப் போலச் சுவைக்கத்தக்கது. இவ்வாசிரியர் பின்னும் இவ்வாறான பல நூல்களை இயற்றிக் கொண்டு வருகின்றார் என அறிகிறேன். தமிழ் கத்தோலிக்க உலகமானது இத்தகைய முயற்சிகளை ஊக்கித்து, இவற்றால், தனக்கு உண்டாகும் அளப்பரும் நலன்களை அடைந்துகொள்ள முற்பட வேண்டியது.

(ஒப்பம்) சா. ஞானப்பிரகாச சுவாமி.

# பாயிரம்.

திருச்சிராப்பள்ளி முதலிய பிரபல பட்டணங்களில் வசிக்கும் பிராமணர் முதலிய மேன்குலத்தோ ரெனப்படும் இந்துக்களிலும் அஞ்ஞானிகளிலும் பலர் மனந்திரும்பி சத்திய வேதத்தை பேற்றுக் கொண்டிருப்பது ஷை. நகரவாசத்தார்களறிந்த விஷயம். இவைகளை ஒருவாறு விளக்க வெளி வரும் புத்தகங்களில் "மகா தேவய்யர் சரிதை" யுமொன்றுகும். மேலும் மங்களூரில் கத்தோலிக் கலாசாலையில் கற்பிக்கப்பட்ட ஓர் பிராமண வாலிபர் பல இடையூறுகளி டையிலும் மனஞ்சோராமல் சத்தியவேதத்தை யேற்றுக் கொண்டதைப்பற்றி சென்னை சட்டசபையில் நிகழ்ந்த விவாதத்தையும், கடைசியாய் இதைப்பற்றி ஷை வாலிபர் "எவரும் என்னை வற்புறுத்தவில்லை, என் மனசாட்சியே என்னைச்சமய ஆராய்ச்சி செய்யத் தூண்டி, இதனுல் உண்மைச் சமயத்தை யேற்றுக் கொண்டேன்" என்று எழுதிவிடுத்த சுற்று விளம்பரத்தையும் கவனித்தவர் பலர் அறிந்திருப்பார்கள்.

இது இப்படி இருக்க நாட்டுப்புறங்களில் ஜீவிக்கும் எழைகளினிடையே சம்பவிக்கும் ஷை நடப்புகளுக்குச் சரிதைகள் வெளிவந்துளதோ வெனச் சந்தேகித்து இவ்விதம் நிகழ்ந்த வோர் சம்பவத்தை தெரிவிக்கும் இச்சங்க்ஷேபத்தை நவீனகப் போங்கில் எழுதினேன். காணுங் குற்றங்களைக் சமிக்க வாசகர் கேட்டுக்கொள்ளப் படுகிருர்கள்.

இப்புத்தகத்திற்கு முன்னுரை எழுதித்தந் துதவிய எம் வணக்கத்துக்குரிய சுவாமி யவர்களுக்கு எம்மனமார்ந்த வந்தன முரித்தாகுக.

இங்ஙனம்

ஆக்கியோன்.

# "குரூஸ்"

அல்லது.

## ஓர் இந்துவாலிபன் கிறிஸ்துவனானது.

1 ம் அத்தியாயம்.

### பாலபருவம்.

தென்னிந்தியாவில் சிறந்துவிளங்கும் நகரங்களில் ஒன்ருகிய மதுரைக்கு நேர் கிழக்கே தேவகோட்டை என்னும் பெயருடைய ஓர் ஊருண்டு. அதற்கு சுமார் இருபதுமயில் தூரத்திலுள்ள "இலுப்பக்குடி" என்ற கிராமத்தில் இந்துக்கள் பூசிக்கும் வைரவர் ஆலயமொன்றிருக்கிறது. இக்கோவிலைச் சேர்ந்த காணி பூமிகளில் விசேஷமானது ஓர் தென்னந்தோட்டம். இத்தோட்டத்தைப் பலவருடங்களுக்கு முன் "சிரவளி" யென்றவன் காவல்காத்துவந்தான். இவனுக்கு நாச்சியென்ற பெயருடைய மனைவியிருந்தாள். அவர்களிருவரும் இலலறம் நடத்துங்கால் ஐந்து ஆணும் நான்கு பெண்ணும் பிறந்தனர். இவற்றில் ஓர் ஆண்பிள்ளை இறந்துவிட்டது. மற்ற நான்கு ஆண்பிள்ளைகளில் எல்லோருக்கு மிளையவனை "வைரன்" என்பவனுக்குச் சுமார் ஏழுவயது நடக்கும்போது அக்கிராமத்திற்கு $1\frac{1}{2}$ மைல் தூரத்திலுள்ள புதூர் என்ற கிராமத்திற்கு இவன் மைத்துனன் அலகன் என்பவனிடம் கல்விபயில அவன் தாய் தந்தையர் அனுப்பினார்கள். வைரன் தினந்தோறும் காலையில் தன் மைத்து

னன் வீட்டிற்குச் சென்று அவன் படித்துக் கொடுப்பவைகளை உரைகுறையாய்க் கேட்டுக்கொண்டிருந்து மாலையில் தன் வீட்டிற்கு வருவான். இப்படியிருக்கும்போது வைரன் தனக்குப் படித்துக்கொடுப்பவைகளை விளையாட்டுப் புத்தியாலும் கவனக்குறையாலும் மறந்துவிடுவதால் அவன் மைத்துனன் வைரனைக் கொடுமையாய் அடிப்பான். இதனால் வைரன் கொடுமையைச் சகிக்கமாட்டாதவனாய் காலையில் தன் வீட்டைவிட்டு படிக்கப்போவதுபோல் புறப்பட்டுத் தன்மைத்துனன் வீட்டிற்குப்போகாமல் வேறு இடங்களுக்குச் சென்று விளையாடி நேரத்தைப் போக்கிவிட்டு மாலையில் வீடுவந்து சேருவான். அவன் இப்படிச் செய்து வருவது அவன்வீட்டாருக்கும் மைத்துனன் வீட்டாருக்கும் கொஞ்ச நாள் தெரியாமலிருந்தது. ஆனாலும் "பலநாள்திருடன் ஒருநாளகப்படுவான்" என்பதுபோல் அவன் செய்கையானது தகப்பனுக்குத் தெரிந்தது. அதன்மேல் காரணம் என்னவென்று மகனை விசாரித்தபொழுது "மைத்துனன் என்னைச் சகிக்கக்கூடாதபடி அடித்துத் தொந்தரை செய்வதால் இனி ஒருக்காலுமங்கே போகமாட்டேன்" என்றுகூறிவிட்டான். கடைசியாகச் சிரவளியென்போன் தன்மாடுகளை மேய்க்கும்படி தன்மகனுக்குச் சொன்னதன்மேல் வைரன் மாடுகளை மேய்க்கும் தொழிலை மேற்கொண்டு செய்துவந்தான்.

## 2-ம் அத்தியாயம்.

## கிறீஸ்து வேதத்தில் ஆசை.

இப்படியிருக்க வைரன் வீட்டிற்குச் சற்றப்பால் "அருளப்ப உடையார்" என்னும் பேருடைய உத்தமக் கத்தோலிக்கரின் வீடொன்றிருந்தது. வைரன் தன் ஓய்வு நேரங்களில் அவ்வுடையார் வீட்டிற்குச் செல்லுவான். அவ்வுடையார் தான் அனுசரித்துவரும் கத்தோலிக்கு மதத்தைப் பற்றி அவனுக்குச் சொல்லுவார். அவருக்கு மரியம்மாளென்ற ஓர் குமாரத்தியிருந்தாள். அப்பெண்மணியும் தங்கள் வேதத்தைப்பற்றித் தனக்குத்தெரிந்தசிலஜெபங்களைக் கற்றுக்கொடுப்பாள். இவன் தந்தையுடன் கிறீஸ்துவர்கோவிலுக்கும் போய்வருவான். இப்படியாகக் கிறீஸ்து வேதத்தில் அவனுக்குப் பிரியங்கொடுத்து மனதில் வேரூன்றிவிட்டது. தன்தாய் தந்தையரிடம், "கிறீஸ்துவ வேதக் கோவிலுக்குப் போய்வருகிறேன். அதில் எனக்கு அதிகப் பிரியங் கொடுத்துவிட்டது." என்று அடிக்கடி சொல்லிவந்தான். ஆனால் அவன் பெற்றோரும் சகோதரரும் நயத்தாலும் பயத்தாலும் அவனைத் தண்டித்து "நீ அவ்வேதக் கோவிலுக்குப் போகக் கூடாது. நம்முன்னோர்கள் வணங்கி வந்த தெய்வத்தையே வணங்கவேண்டும்" என்று வற்புறுத்திவந்தார்கள். பிள்ளைகளோடு சாதாரணமாய் அதிக பக்ஷத்துடன் நேசித்துச்சம்பாஷித்து வருவது தாய்மார்களல்லவா? அதுபோலவே அவனும் தன்தாயிடம் அடிக்கடி இதைப்பற்றிச்சொல்லிவந்தான். அவன் தாயும் அவனைப்பார்த்து "மக

னே நான் உயிருடனிருக்கும்வரையும் அதைப்பற்றி ஒன்றும் தொந்திரவு செய்யாதே. என்காலம் முடிந்தபிறகு நீ யெப்படியாவது உன்னிஷ்டம்போல் செய்து கொள்ளலாமென்று கண்டிப்பாய்க் கூறிவிட்டாள்.

## தன் சமயத்தில் வெறுப்பு.

அப்போது பையனுக்கு வயது 12 இருக்கலாம். அவன் மாடு மேய்க்குந் தொழிலைவிட்டு வயிற்றுப் பிழைப்புக்கு வேலைசெய்து பணம் சம்பாதிக்க வேண்டுமென்ற எண்ணங் கொண்டவனாய் அக்கிராமத்திலுள்ள ஓர் குடியானவனுக்குச் செங்கல் அறுத்துக்கொடுக்கும் வேலையில் அமர்ந்தான். அவ்விடத்தில் அவனுக்குவெள்ளையன் என்ற தோழன் ஒருவனகப்பட்டான். அவ்வெள்ளையனென்பான் இந்துவாயினும்பையன் கிறிஸ்துமதத்தைச் சேர்ந்துவிடவேண்டுமென்ற எண்ணத்தை மறந்தவனல்ல. கூலிவேலையில் அவனுக்கு தினசரி 12 அணா கிடைக்கும். இவ்விதமாய் மூன்று வருடங்கள் கடந்தன. இம்மூன்று வருடங்களுக் கிடையிலும் அவன் அருளப்ப உடையார் மரியம்மாளிவர்களுடன் அடிக்கடி விசேஷமாய் ஞாயிற்றுக்கிழமைகளில் அவர்கள் தேவாலயத்திற்குச் சென்று அவர்களைப்போல் கோவிலில் வணக்கஞ் செய்து கைகூப்புவது, கரம் வணங்குவது முதலியவைகளைச் செய்வான். ஆனால் அவன் குடும்பஸ்தர்கள் போகும் இந்துக் கோவில்களுக்குப் போகமாட்டான். அவன்

எனக்குச் சொன்னது இன்னும் நான்மறக்கக்கூடவில்லை. அதாவது :—“ ஐயா, எங்கள்முன்னோர் களைப்போல் என்பெற்றோரும் சகோதரர்களும் வணங்கிவரும் தெய்வங்களின் ரூபம் பயங்கரமாயிருக்கிறது. அச்சிலைகளின் கண்களைப் பார்ப்பதற்கு என்னெஞ்சம் கொஞ்சமும் சகிக்கவில்லை. அவைகள் அவலட்சணமாகவும் பயங்கரமாகவுமிருக்கின்றன.” இந்த தேவாலயங்களுக்கு வைரன் செல்வதேயில்லை. எப்படியாவது போக நேர்ந்துவிட்டாலும் அங்குள்ள தேவதைகளின் சிலைகளைக் கண்ணேறெக்கான். தற்செயலாய்க் கண்டுவிட்டாலும் ஏதோ மலைப்பாம்பு தன்னை விழுங்க வருவதுபோல் பயந்து நடுநடுங்கி இல்லத்திற்கு ஓட்டம் பிடிப்பான்.

3-ம் அத்தியாயம்.

## தாய் தந்தையர் அந்தியகாலம்.

இதற்குள் வைரன் தாயின் அந்தியகாலம் நெருங்கிவிட்டது. மிகவும் மெலிந்து போய் நடக்க சக்தியற்றவளானாள். பாயும் படுக்கையுமானாள். வைரனுக்குச் சில மூத்த சகோதரர்களிருந்த போதிலும் அவர்கள் தம் மனைவி மக்களுடன் அவரவர்களுடைய குடும்பத்தைக் கவனித்துக் கொண்டார்களே ஒழியத் தங்கள் தாயாகிய நாச்சியென்பவளைக் கவனித்து நடத்தினவர்களல்ல. வைரனின் தந்தையும் அதிக வயது சென்ற கிழவனாகி விட்டதால் தன் குடும்பத்தைப் போஷிக்கவும் மனைவிக்கு மருந்துமாயம் செய்யவும் சக்தியற்றவனாயிருந்தான். இந்த நாச்சியின்

கடைகுட்டி வைரன் தான், தனக்கு கிடைக்கும் அன்றாடச் சம்பளத்தில் தன் தாய்க்கு வேண்டியவைகளை வாங்கிக் கொடுத்து இம்மூவர்மட்டுமுள்ள குடும்பத்திற்குப் போஷகனுயிருந்தான். இம்மாதிரியான சம்பவங்கள் அநேகமாய் எளிய குடும்பங்களில் நடக்கிறதென்று எண்ணக்கூடாது. நகரங்களிலுமுள்ள சில பிள்ளைகள் தம் தாய் தந்தையரால் சிரமப்பட்டு வளர்க்கப்பட்டதை மறந்து அவர்கள் தங்களைப் பல்வேறு இடையூறுகளுக்கு மாளாக்கிக் கஷ்டப்பட்டு வளர்த்துப் படிக்கவைக்க எவ்வளவோ சிரமப்பட்டுச் செலவு செய்து ஆளாக்கிவிட்டதையுங் கொஞ்சமுமெண்ணுமல், தாங்கள் வளர்ந்து பெரியவர்ளாகி கால்சட்டை, கைசட்டை, தொப்பி, பூட்ஸ் அணிந்து துரைமார்கள் போலாகிவிட்டோம் இவர்கள் யாரோ எவரோ என்று தம் கிழட்டுத் தாய் தந்தையரைப் பெற்றோரென்று சொல்லவும் வெட்கப் படுகிறார்கள். தாய் தந்தையரை இவ்விதமான செய்கைகளால் மனநோகச் செய்து அப்பெரியோர்களின் சாபத்திற்காளாகித் தங்களின் கடைசிக் காலத்தில் தங்கள் பிள்ளைகளாலும் ஈங்கிசப்படுத்தப்படுகிறார்கள். இப்படியும் நடக்குமாவென்று சிலர் சந்தேகிக்காத வண்ணம் ஒரே ஒரு சின்ன சம்பவத்தைச் சுருக்கமாய்ச் சொல்லிவிட்டுக் கதையைத் தொடர்கிறேன். ஒரு ஐரோப்பியரிடம் குமாஸ்தா வேலை செய்த ஒருவர் மேற்கூறிய கொடுமைகளைத் தன்பெற்றோரிடமனுசரித்து வந்தவராயினும் குமஸ்தாவின் தந்தை அடிக்கடி தன் குமாரனின் பங்களாவுக்குச் சென்று வெகு சிரமத்துடன் சிறிது உதவிபெற்று வருவார். ஒரு நாள் இந்த ஐரோப்பியர் தான் அதிகப் பிரியமாய்க் குமஸ்

தாபோலல்ல சிநேகிதனைப் போல் பாவித்து நடத்திவந்த குமஸ்தாவின் வீட்டிற்குச் சென்ற போது குமஸ்தா அவ்வைரோப்பியரை எதிர் கொண்டழைத்து வெளியே புறப்படப்போகும் பொழுது அன்றுதான் வந்திருந்த தன் தந்தையை ஐரோப்பியர் கண்டு விடவும் இவர் யாரெனக் குமஸ்தாவை விசாரிக்க என்னுடைய பழைய கிழட்டு வேலைக்காரன் (Servant) என்று சொல்லிப் போய்விட்டார்கள். அதே கிழவனை சில மாதங்களுக்குப் பிறகு ஷை ஐரோப்பியர், ரோட்டில் சந்தித்தார். அப்பொழுது எங்கே போகிறு யென்று வினவ, நான் என் மகனிடம் போகிறேன் என்று கிழவன் சொல்ல, உன் மகனுரென்று மறுபடியும் வெள்ளையர் கேட்கத்தங்களுடைய குமஸ்தாவே என் மகனென்று கிழவனுரைக்க, நீ சொல்வதுண்மை தானுவென்று ஐரோப்பியர் கேட்டதற்கு கிழவன் உண்மையிலுமுண்மை யென்றுரைத்தான். பிறகு இருவரும் குமஸ்தா வீட்டிற்குச் சென்று முதலில் ஐரோப்பியர் தன் குமஸ்தாவைக்கண்டு "இப்பெரிய மனிதனைத் தானே நீ அன்று ஒரு தினம் உன் வேலைக்காரரென்று சொன்னுய், ஆயினும் இப்போது இம்மனிதனை யாரென்று சொல்கிருய்" என்று கேட்க, "ஆம் ஐயா முன் சொல்வது போலவே இப்போதும் கிழவனை என் பழைய வேலைக்கார னென்றே சொல்லுகிறே" னென்ருர் அக்குமஸ்தா. பின்னுமவ்வைரோப்பியர் அக்கிழவனை நோக்கி, பெரியவரே இந்த வாலிபனை யாரென்றுசொல்லுகிருயென்று கேட்க, "துரையே உண்மையைச் சொல்லுகிறேன். இவன் என் குமாரனே, நான் பெற்று

வளர்த்த அருந்தவப் புதல்வனே'' யென்று சொல்லி வாய் மூடுமுன்னர்க்கண்ணீர்மாலை மாலையாய் பெருக்கினான். மகன் பேச நாவெழாமல் வெட்கத்தால் திக்கு முக்கலாடி விக்கி விறைத்து நின்றான். உடனே அவ்வெள்ளையர் ''ஓ குமஸ்தாவே, உன் படிப்பின் பெருமையாலும் அக்கிழவனின் நிலைமையிலும் பொய்யான உன் உடைகளின்நிலைமையின் செருக்காலும் நீ அக்கிழவனைத் தந்தையென்று சொல்ல மறுத்தாய்; பெற்றவனை இல்லையென்ற நீ வேறெது சொல்லத் துணியாய்? உடனே ஓடிப்போ'' வென்று ஏசிப் பேசி விரட்டி விட்டார். இதை வாசிக்கும் நேசனே வியாஸம் வெகுவாய் விரியுமென்றஞ்சி யித்துடனிறுத்தி இப்படியான பிள்ளைகளால் கஷ்டத்தை யனுபவிக்கும் பெற்றோருக்கு தேவன் வேறு வழியாய்ச் சற்று திருப்தி யளிக்கிறார். இது போலவே ''நாச்சி'' ''சிரவளி'' யென்ற பெற்றோருக்கு ''வைரன்'' என்ற சிறுவனால் திருப்தி யளிக்கச் சித்தமாயிருந்தார். நாச்சி அதிக வியாதியஸ்தளாகிச் சிரமப்படும் பொழுது இவ்வைரன் தன் தாயை வெகு பிரயாசைப்பட்டுத் தேற்ற முயற்சித்து வந்தும் வியாதி முற்றி விட்டதால் பிழைப்பது நிச்சயமில்லாமலாகிவிட்டது. அவளைப் பூலோகத்தை விட்டு நீக்க தேவன் சித்தமான நாள் நெருங்கிவிட்டது. அந்த மணியுங் கிட்டியது. வைரன் தன் தாயின் படுக்கையண்டையிருக்கிறான். சில நிமிஷங்களுக் குள்ளாக விண்ணுலகை யெய்த நாச்சியென்பவள் தன் மகனை நோக்கி ''அருமை மகனே, என் பிள்ளைகளில் பெரிய புத்திரனே, நீ யொருவனே என்னை யாதரித்து வந்தாய், நான் உயிர் பிழைப்பேனென்று நீ எனக்காகப் பட்ட கஷ்டங்

களுக்குக் கடவுளுனக்குச் சம்பாவனை யளிப்பார். பயப்படாதே, என் கடைசி காலத்தில் நீ ஒருவன் தான் உதவியவன். என்னேச மகனே இன்னும் சிறிதுநேரத்திற்குள் என் ஆவி பிரிந்துவிடும். அதன் பிறகுநீ எனக்காகத் துக்கித்துக் கொண்டிராமல் உன்பிழைப்பைக் கவனித்து வா. உன்னிஷ்டம் போல் என்னைப் பூமிதானஞ் செய்துவிட்டு நீ வெகு காலமாகக் கேட்டுக்கொண்டிருந்த கிறீஸ்து மதத்தில் சேர்ந்துகொள். நீ எங்கு சென்றாலும் கடவுளுக்கு நல்ல பிள்ளையாக நடந்துவரத் தவறாதே. உன்னைக் கடவுள் ஆசிர்வதிப்பார்..................நீடூழி வாழ்வாயாக'' என்று கூறிக்கொண்டே உயிர் நீத்தாள்.

தன் உயிர் பிரியும் வேளையிலும் மகனின் ஆவலை மறவாத தாயானவள் கிறீஸ்துமதத்தில் சேர்ந்துகொள்ளச் சொன்னதிலும் இதற்குச் சில வருடங்களுக்கு முன் நான் இறந்த பிறகு வேதத்தில் சேர்ந்துகொள் என்று இவளே சொன்னதில் உட்கருத்தில்லாமலில்லை. இவளைபோலச் சிலர் கிறீஸ்துவேதமே மெய்யான வேதமென்று அறிந்தும் அதில் தாங்களும் பிள்ளைகளும்சேர்ந்துவிட தாமதிப்பதின் காரணம்; இவர்களை மற்றவர்கள் கேலி செய்து துவேஷிப்பார்களென்றும், ஜாதிப்பிரஷ்டமும் சில சமயம் ஊர்ப்பிரஷ்டமும் செய்வார்களென்றும் பயங்கொண்டு சும்மாவிருந்து விடுகிறார்கள்.

தாயிறந்த பிறகு அவளைப் பூமிதானஞ் செய்த வைரன் ஆராத்துயரங் கொண்டிருப்பானென்று சொல்லவும் வேண்டுமோ? இத்துயரம் ஆறாமுன் "பட்டகாலிலே

படும் கெட்டகுடியே கெடும்'' என்றபடி இவனின் தந்தையுஞ் சில மாதங்களில் இறந்து விட்டான்.

4ம். அத்யாயம்

## மங்கிய விசுவாசம்

வைரன் தன் தாய் மரித்த விஸனத்தினால் ஆறு துயர முற்றுச் சில தினங்கள் தன் தாய்க்காகத் துக்கங் காத்திருந்தான். தன் தாய் மரிக்குமுன் சொன்னவற்றை அடிக்கடி ஆழ்ந்து சிந்தித்து வந்தான். தன்னைக் கிறீஸ்துவேதத்தில் சேர்ந்து கொள்ளத்தாயார் உத்தரவளித்துக் காலகதியடைந்து விட்டார்கள். ஆனால் இன்னும் பல தடைகளிருக்கின்றனவே. தகப்பனுருயிருடனிருக்கும் வரையும் இதைப் பற்றிப் பகிரங்க ஏற்பாடொன்றுஞ் செய்ய வியலாது. இன்னும் அண்ணன்மார்க ளிருக்கின்றனர். என்ன செய்வது இவர்களை யெல்லாங் கடந்தல்லோ கிறீஸ்து மதத்தைத் தழுவியனுசரிக்க வேண்டியிருக்கிறதென்று எண்ணியெண்ணிப் பெருமூச்சுவிடுவான். ஆயினும் கிறீஸ்து மதப்பற்றுதலானது அவனுள்ளத்தை விட்டுச் சற்றும் விலகினதில்லை. அதே எண்ணமும் ஏக்கமுமாக விருந்தான். தன் தந்தை சகோதரர்களைக் காணுமல் கிறீஸ்துவர் கோவிலுக்கு முக்கிய தினங்களில் போய்வந்தான். வருடாந்த திருவிழாக்களுக்கும் கோவில் ஆராதனைச் சமயங்களிலும் போகத்தவருன். ஆயினும் இன்னுமிவன் ஞானஸ்னானம் பெற்றுக் கிறீஸ்துநாதரின் பிள்ளைகளில் ஒருவனுகவில்லை. மேலும் அருளப்ப உடையாரும் அவர்தந் தவப்புதல்வி மரியம்மாளும் வைரனின் தந்தைசகோதரர்களின் கடுமையான உத்திரவுக் கஞ்சியும், முகத்தாக்ஷண்ணியத்தால் வைரனுக்

கு அடிக்கடி வேதக் கதைகளுரைப்பதையுஞ் இன்னுமவன் தங்கள் வீட்டிற்குவருவதையுந் தங்களுடன் கோவிலுக்கு வருவதையுந் நிற்பாட்டிவிட்டார்கள். இங்ஙனமாக வைரன் அருளப்பவுடையார் வீட்டிற்கு அடிக்கடி போவதையுமவர்கள் போதனையைச் செவிகொள்வதையும் பகிரங்கமாக தன் சகோதரர்க்கும் தந்தைக்குந் தெரியாமல் நிற்பாட்டி விட்டானனாலும் நாமுன் சொன்னதுபோல் ரகசியத்தில் அவன் விசுவசித்ததால் மங்கின விசுவாசம்" அவனிருதயத்தில் சாம்பலினுள் நெருப்புபோலிருந்தது.

வைரனின் தாய் இறந்த சிலவாரங்களுக்குப் பிறகு வைரன் தன் தினசரிக் கூலி வேலைக்குச் சென்று தன் ஜீவனத்தை நடத்தி வந்தான். இதற்கு நான்குவருடங்களுக்கு முன்னதாகவே வைரனின் தந்தை சிரவளியென்பவன் தன் மகனின் வேண்டுகோளுக்கிணங்கி தன் தோட்டக் காவல் வேலையினின்று விலகி வீட்டிலேயே தன் தள்ளாத வயதைக் கழித்து வந்தான். இக்கிழவனுக்கு முடிவுகாலங் கிட்டிவிட்டது. தன் மனைவி மரித்த மறு வருடத்தில் சுமார் 15, 16, மாதங்களுக்குப் பிறகு தன் மனைவியைப் பின்பற்றிப்பூலோக வாழ்வைத்துறந்து மேலோகவாழ்வைநாடி போய்விட்டான்.

இவ்விதமாகத் தாயையுந் தந்தையையுமிழந்த வைரன் சகோதரர்களின் உதவி கிஞ்சித்து மில்லாமல் தன் சம்பாதனையைக்கொண்டே தன்ஜீவனத்தை நடத்தி வந்தான். இப்போதாவது தான் கிறீஸ்துமதத்தில் சேர்ந்து விடலாமாவென்று எண்ணித்தன் சகோதரர்களிடம் வைரன் உத்திரவு

கேட்டான். "கஞ்சி வார்க்க ஆளில்லாவிட்டாலும் கச்சைகட்ட ஆளிருக்கிறது" என்ற நம்பழங்கதைக் கொப்ப வைரனின் சகோதரர் தாட், பூட், ஆச்சாபோச்சா, அதையுமா மனதில் வைத்துக் கொண்டிருக்கிறாய். அந்த எண்ணத்தைக் கனவிலுங் கருதாதே யென்று அவனைப் பயத்தாலும் நயத்தாலும் அப்படி செய்து விடுவோம் இப்படி செய்திடுவோம் என்று பயமுறுத்தி வந்தார்கள். இப்படியாக இவன் மனஞ்சலித்திருக்கும் நாளில் இலங்கையிலிருந்து சுப்பையா வென்ற கங்காணி ஒருவன் தன்சொந்த வூராகிய அருந்தாங்கிக்கு வந்து இலங்கைக்கு கூட்டிப்போக ஆள் சேகரஞ்செய்தான். இன்னும் தன் பந்து ஒருவருடன் இவுப்குடிக்குச் சென்று அங்கும் ஆள்களைச் சேகரஞ்செய்தான். இதில் நாம் கதா நாயகன் வைரனும் இவன் தோழன் வென்ளையனுஞ் சேர்ந்தார்கள். வைரனுக்கு தாய் தந்தையரில்லாததாலும் பெருக்கு பட்டும் அண்ணன்மார் என்று சிலசகோதர் இருந்தபடியாலும் இவனை இந்து மதஸ்தனுகிய சுப்பையாவென்ற நாடார் குலத்தவனுகிய கங்காணியுடனனுப்பத் தடை செய்ய வில்லை. இங்கிருந்து கொண்டு நம்மை எந்த நேரமும் கிறிஸ்துமதத்திற்குப் போய்விடுவதாகச் சொல்லிச் சிரமப்படுத்திக் கொண்டிருப்பவன் இந்த இந்துவுடன் இந்துக்கள் நிறைந்த இலங்கைக்குப் போவதால் யாதொரு தீங்கும் நடக்காதென்றும் கிறிஸ்து மதத்திற்கு அவன் போய்விட முடியாதென்றும் எண்ணினுர்கள். ஆனல் இலங்கைக்குச் சென்ற சில மாதங்களுக்குள் அங்கிருந்த கிறிஸ்து மதஸ்தவர்களால் கிறிஸ்து மதத்தைப் போதிக்கப்பட்டு கிறிஸ்துமதத்தை அனுசரித்து ஞானஸ்

ஞானம் பெற்றுக் கிறீஸ்தவனுகி விட இருக்குகினென்று இவர்கள் கனவிலுங் கருதினவர்களல்ல. இவ்விபர பின்னுல் வாசிக்க விளங்கவரும். இவைகளைத் தான்றியாமல் இலங்கையில்தான் ஞானஸ்நானம்பெற்றுக்கிறீஸ்துவனுகி தன் ஆயுளில் அதிகமான பாகத்தைச் செலவழிக்க வருகிறதென்று அறியக்கூடாத வைரன் ஷெ சுப்பையாக் கங்காணியுடனும் தன்தோழன் வெள்ளையனுடனும்மற்றும்பல ஆட்களுடனுஞ் சொந்தஊரைவிட்டுப் புறப்பட்டு இலங்கையிலுள்ள நுவரெலியாவுக்குச் சுமார் மூன்று மைல் தூரத்திலுள்ள சின்னக்காடு என்னும் தேயிலைத் தோட்டத்திற்கு வந்து சேர்ந்தான். இப்படியாகச்சில மாதங்களைக் கழித்தான். இதற்குப்பிறகு அத்தேயிலைத் தோட்டச் சூப்ரண்ட் துரையாகிய ஐரோப்பியர் வீட்டிற்கும் பூந்தோட்டத்திற்கும் ஒரு ஆள் தேவையாயிருந்ததால் நல்ல வாலிபனும் சுறுசுறுப்புள்ளக் கெட்டிக்காரனுமான இந்த வைரன் ஷெ ஐரோப்பியர் பங்களா பூந்தோட்டத்திற்கு இரண்டாவது தோட்டக்காரனுய்ச் சென்று தன் வேலையை யூகமாய்ச் செய்து அங்குள்ள பெரியோர்களுக்குப் பிரியமுள்ளவனுக நடந்து வந்தான். இவனுடைய நல் நடத்தைக்கும் கெட்டிக்காரத்தனத்திற்கும் சில மாதங் கழிந்தபிறகு அவ்வைரோப்பியர் பங்களாவுக்கு உள் பணிவிடைக்காரரில் ஒருவனின் வேலைக்காலியாயிருந்ததால் அவ்வுத்தியோகத்திற்கு ஏற்றுக் கொள்ளப் பட்டான். இவ் வேலையிலும் புத்திசாலித் தனமாகவே நடந்து வந்தான்.

---

5-ம் அத்தியாயம்.

## வேத உணர்த்துதல்

இங்ஙனமாக வைரன் என்போன் உத்தியோகப்படியே றிய சில மாதங்களில் அவனெஜமானராகிய அவ் வைரோப்பியர் சில மாத லீவில் தன் சுய நாடாகிய இங்கிலாந்துக்குப் போனார். இவருக்குப் பதிலாக மற்றொரு ஐரோப்பிய துரை அங்கு வந்து விடவும் ஷை துரையிடமே நம் கதாநாயகனுக்கும் வேலை கிடைத்தது. புதிதாய் வந்த ஐரோப்பியரிடம் மரியதாஸ் என்பவர் தான் தலைமை உத்தியோகஸ்தர். இவருக்குத் தான் வைரனென்பான் முக்கியப் பணியாளன் போல் உதவியாகவிருந்து உண்மையுள்ள ஊழியனாக நடந்துவந்தான்.

இந்த விதமாய் மரியதாஸ் என்னும் பெயருடைய கனவான் தன் அறையில் இளைப்பாறியிருக்கும் நேரத்தில் வைரனைத் தன்னிடமழைத்து அவனுடன் சம்பாஷித்துக் கொண்டிருப்பார். இவ்விதமாக இரண்டொரு தினத்தில் வைரனை அஞ்ஞானியென்றறிந்து அவன் முன்னோர்கள் அனுசரிக்கும் இந்துமதத்திலுள்ள ஊழல்களையும் பொய்யான காரியங்களையும் எடுத்துக் காண்பித்து தங்கள் மெய்யான வேதத்தின் உண்மைகளை விரிவாயுரைத்துக் கொண்டிருப்பார். அஞ்ஞானிகள் வீணும் பொய்யும் புளுகும் நிறைந்த கோட்பாடுகளைப் பின்பற்றி தங்கள் ஆத்தும நன்மைகளை யிழந்து இருளடர்ந்த விடத்துக்குப்போய்ச் சேருவதையும், மெய்யங் கடவுள் எந்நாளும் நிலைத்திருக்கப்

போதித்து தமக்குப் பிரதிநிதிகளை விட்டுப் போனதி லிருந்து அவர்களின் போதனையைக் கேட்டனுசரிக்கும் கத்தோலிக்கு மதஸ்தர் அடையும் ஆனந்த ஆத்தும நன் மைகளையும் விஸ்தாரமாய் அவனுக்கு எடுத்தோதுவார். இன்னும் வேதச் சரித்திரங்களில் சிலவற்றையும் அர்ச்சிய சிஷ்டவர்களின் சரித்திர சுருக்கத்தையும் சொல்லுவார். இவைகளை யெல்லாம் வைரன் வெகு கவனத்துடன் கேட் டுக் கொண்டிருப்பான். இப்படியாக இவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது நேரங் கழிவதே அவர்களுக்குத் தெரியாமலாகி விடும். சில சமயங்களில் நடுநிசி வரைப் பேசிக்கொண்டிருந்து பிறகு அவரவர்களின் படுக்கைக்குச் செல்லுவார்கள். சாதாரணமாய் மரியதாஸ் என்னும் பெரி யார் நீண்டபேச்சுடையவர். ஒரு காரியத்தை இரண் டொரு சொற்களால் சொல்லி விடமாட்டார். பிரசங்கம் போன்ற நீண்ட பேச்சுடையவர். வீட்டில் அவர் பிள்ளை களுக்குப் போதித்துக் கொண்டிருக்கும் போது சில சம யங்களில் அப்பிள்ளைகளும் அவர் பாரியாளும் மிகவும் சலிப் படைந்து விடுவார்கள். சொன்னதையே பன்னிப் பன்னி சொல்லும் குற்றத்துக் காளாவரென்று குறை கூறுவார்கள்.

இன்னொரு குணம் அவரிடத்தில் இருந்தது. சில போலிப் போதகர்களைப் போல் வாய்ப்பேச்சோடு நில்லா மல் போதனையிலுஞ் சாதனையேமேல் என்றபடிசெய்கையா லுஞ் சாதிப்பார். இப்படியானவரின் போதக வலையிலகப் பட்ட வைரன் வீணாய்ப் போகவு முடியுமோ? ஒருக்காலு மில்லை. இந்த விதமாகத் தினந்தோறும் அக்கள்வன்

வைரன் என்ற பணியாளுக்கு வேத உணர்த்துதல் செய்து கொண்டிருந்தார். வைரனுள்ளத்தில் சாம்பரினுள்ளிருந்த நெருப்பைப் போன்ற மங்கின விசுவாசமானது திரும்பவும் பிரகாசிக்கத் தொடங்கிற்று.

ஸ்ரீமான் மரியதாஸ் என்பவர் தன் எஜமானுடன் எழு மாத காலத்துக்கு மட்டும் ஷெ யிடத்திற்கு வந்திருந்தார். அன்னவரின் குடும்பத்தார்கள் யாவரும் அவர்முன்னிருந்த விடமாகியதும் சுமார் இரண்டு மைல் தூரத்தினுள்ளதுமான ஓரிடத்தில் வசித்து வந்தார்கள். அடிக்கடி மரியதாஸ் என்பவர் வைரனைத் தன் பழைய வீட்டிற்குக் கடிதம், சாமான்கள் முதலிய கொடுத்தனுப்புவார். அங்கிருந்து மவன் ஷெ யாரின் மனைவி கொடுத்தனுப்புஞ் சாமான், கடிதமுதலியவைகளைக் கொண்டு அவரிடம் கொடுப்பான். இப்படியாக வாரமிரண்டொரு முறை அங்குப் போகுஞ் சமயங்களிலெல்லாம் மரியதாஸரின் பத்தினியார் வைரனுக்கு தேநீர், தாம்பூலம் சில சமயங்களில் ஊணுதவி அவள் அவன் அஞ்ஞானியென்றறிந்ததால் வேதசத்தியங்களிலுஞ் சிலவற்றை சொல்லிக் காண்பித்து அவனைச் சேர்ந்தோரனுசரிக்கு மிந்து வேதத்திலுள்ள வீண் குருட்டாட்டத்தையுஞ் சொல்லுவார்கள். இப்படியாக அவனுக்கு இங்குமங்குமாக இரண்டுவிடத்திலும் உணர்த்துத லளிக்கப்பட்டது. ஒரு நாளில் வைரன் அங்குப் போய்ப் பேசிக்கொண்டிருந்து வரும்போது அம்மரியதாஸ் கனவானின் புதல்வி பெர்னதத் என்னுஞ் சிறுமி ஓர் சுரூபம் தேவமாதாவின் தாயார் அர்ச் மரியாயிக்குப்

போதிக்கும் பாவனையானது) கழுத்திலணிந்து கொள்ளக் கொடுத்தாள். இங்ஙனமாக வைரன் மரியதாஸவர்களில்லத்திற்குப் போய் வரும்பொழுதெல்லாம் ஏதாவதொரு சுரூபம், படம் முதலியவைகளைப் பெற்றுக்கொண்டு வருவான். அவரின் மக்கள் கொடுத்த சுரூபத்திலொன்று இன்னுமவன் கழுத்திலணிந்திருக்கிறான். அவன் வேலை செய்துவந்த பங்களாவிலிருந்த வரையிலும் அப்பிள்ளைகள் கொடுத்த தேவமாதாவின் படத்தை வெகு பூஜிதமாக அலங்கரித்து வைத்திருந்தான். இப்பிள்ளைகளிடம் சில ஜெபங்களும் கற்றுக்கொள்வதுண்டு. எப்போதும் முடியாவிட்டாலும் இரண்டொரு தடவை மட்டும் பிள்ளைகள் அவனுக்குச் சொல்லிக் கொடுப்பார்கள். இன்னும் ஒரு சிறு ஜெப புத்தகமு மப்பிள்ளைகள் அவனுக்குக் கொடுத்திருந்தார்கள். ஆனால் வைரன் படிப்பைப்பற்றி முன்னதாக வாசித்திருப்பதி லறிந்திருப்பீர்களாதலால் புஸ்தகம் அவனுக்கு வாசிக்க முடியாதென்று வாசகரறிவீர்கள். ஆனால் இதற்குப் பல மாதங்களுக்குப் பிறகு அவன் ஒரு கத்தோலிக்கு வாலிபரால் படிக்கக் கற்றுக்கொண்டானானதால் இப்போது ஜெப புஸ்தகம் படிக்கும் சக்தியுடையவனாயிருக்கிறான்.

6-ம். அத்தியாயம்.

## ஞானஸ்னான ஆயத்தம்.

கனவான் மரியதாஸ் அவர்களும் ஷியாரின் குடும்பத்தார்களும் நம் வைரனுக்குச் சொல்லிவந்த போதனைகளாலும் காண்பித்த நற்செய்கைகளாலும், தான் ஏற்கெனவே

கிறிஸ்து மதத்தில் சேர விருப்பங் கொண்டிருந்தவனு னதாலும் தக்க சமய மிதுவே என்றறிந்து ஒருநாள் மரிய தாஸ் என்பவரிடம் அணுகி, "ஐயா நான் கிறிஸ்துவேதத்தில் சேர்ந்துகொள்ள அதிக ஆவலுடையவனுகை யிருக்கிறேன். கபைசெய் தென்னைக் கிறிஸ்துவனுக்கி ஞானஸ்னனங் கொடுக்க ஏற்பாடுசெய்து விடுங்கள்" என்றுன். இதையே எதிர்ப்பார்த்திருந்த ஷேபார் "நல்லது அந்தப்படியே செய்வோம்" என்று அதற்கேற்ற தருணம் பார்த்திருந்தார். ஆயினும் அதற்குச் சமயம் இன்னும் ஆகவில்லையாதலால் தடைபட்டு நின்றது.

இதற்கிடையில் ஏழு மாதங்கள் கடந்தன. மரியதாஸென்பார் தன் வெள்ளையருடன் பழைய விடத்திற்குப் போக வேண்டியதாகி விட்டது. இந்தப்பிரகாரம் போய் விட்ட பிறகு வைரனும் தன் பழைய எஜமானனுகிய ஐரோப்பியரிடம் அதே இடத்தில் தங்கிவிட்டான். இதன் பின்னும் மாதங்கள் ஆறு கடந்தன. சுருக்கிக் கூறிவிடுகிறேன்..................இந்த ஆறு மாதங்களில் வைரன் மாதமிரண்டொருமுறை முன்போல் அடுத்த ஒரு மைல் தூரத்திலிருந்த மரியதாஸவர்களின் வீட்டிற்குச் சென்று அன்னவர்களின் புத்திப் போதனைகளைக் கேட்டுவந்தான். தான் ஞானஸ்னனம் பெறுவதற்கு முக்கிய ஜெபங்களாகிய பிரதான மந்திரங்களைக் கிட்டத்திலிருந்த மரியதாஸவர்களின் பந்து ஒருவரிடம் கற்று வந்தான். மேலும் அவரிடம் தமிழ்ப் புஸ்தகம் படிக்கக்கற்றுக் கொள்ளப் பிரயத்தனப் பட்டு அன்னவரின் உரையைக்கேட்டு ஜெப புஸ்தகத்தைத் தானும் படிக்க வேண்டுமே யென்று தமிழ்பாஷையைப்

படிக்கத் துவக்கி பாலர்புத்தகம் படித்து முடிந்தது. முதல் புத்தகமும்துவக்கி படித்துக்கொண்டிருந்தான். ஐந்தில் வளையாததுஐம்பதில்வளையுமா? "நகத்தால் கிள்ளி விடுவது கோடாரியால் வெட்ட நேர்கிறது. வைரனுக்கு நாக்குத்திருந்துவது அதிகக் கஷ்டமாயிருக்கிறது. பருவத்தே பயிர் செய் இளமையிற்கல் என்பது போலாகுமோ? வைரனுக்கு வெகு சிரமமாய்த் தானிருந்தது. படிப்பது சாத்தியமாகி விட்டாலும் எழுதுவது மிகவருத்தமாகி விட்டது. அவனுக்குக்கற்றுக்கொடுத்தவர் அதனை அடிக்கடி எழுதிப்படிக்க வற்புறுத்துவார். ஆயினும் அவனுக்குத் தன் தினசரி வேலையையுஞ் செய்து கொண்டு அதன் மேல் ஓய்வு நேரங்களில் இந்தப்படிப்புக் கற்றுக் கொள்ள வேண்டியிருப்பதாலும் சில மாதங்களில் எழுதுவதை விட்டுவிட்டான். புத்தகத்தைப் பார்த்துப்படிக்க மட்டுங் கற்றுக்கொண்டு வந்தான். இவ்விதமாய் எழுதாமல் படித்து வந்த வைரன் இப்போது சாதாரண புத்தக முதலியவற்றை (ஜெப புத்தகங்களையும்) படிக்க கற்றுக் கொண்டிருக்கிறான். கடித முதலியவற்றையும் படித்து விடுவான். ஆனால் எழுதுவதசாத்தியமாகிவிட்ட தென்று சொல்லி இப்போது அவனுக்குப் படித்துக்கொடுத்தவரோடு முறையிடுகிறான்.

படித்துக் கொடுத்தவரு மென்ன செய்வார்? முன்னே சொன்னதைக் கேட்காமலிருந்து விட்டான். இதைத்தானுணர்ந்து தன்தப்பிதத்திற்குத் தானே வருத்தப்பட்டுக் கொள்ளுகிறான். "வருந்தினால் வராததில்லை" என்றபடி பிரயாசைப்படத் தவறிவிட்டான். இதை விட்டு நடந்ததைக் கவனிப்போம்.

மரியதாஸவர்களுக்கு அதிக அவகாசமில்லாத தாலும் அவர்சற்றுத்தூரத்திலிருப்பதாலும்வைரனுடன் வேலைசெய்யும் இன்னொரு கிறீஸ்துவனை இவனுக்கு கார்டியன் போலிருக்கச்செய்து அவனையே ஞானத்தந்தையாக இருந்து கொள்ள எற்பாடு செய்து இதைப்பற்றி ஒரு தினம் கோவில் பிள்ளையிடம் பங்கு குருவைக் கலந்து பேசச் சொல்லியிருந்தார். தானும் கோவில்பிள்ளையைக் கண்ட சமயத்தில் இதைப் பற்றி சொல்லியிருந்தார்.

1925 ஆம் எப்பிரல் மீ நடுக்கூற்றில் ஒரு தினம் வைரனும் அவனுடன் வேலை செய்த அருளாந்து என்னும் பெயருடையவனும் புறப்பட்டு நுவெரெலியா பங்கு கோவிலுக்குச் சென்று கோவில் பிள்ளையைக் கண்டு அவருடன் மூவருமாக கனம் சுவாமியாரவர்களிடம் சென்றார்கள். அருளாந்தென்பவன் வந்திருக்குங் காரியத்தைச் சுவாமியாரிட முரைத்தான். இதற்குக் குருவானவர் வைரனைப் பார்த்து "நீ கிறீஸ்துவனாகப் பிரீதியாயிருக்கிறயோ?" என்றார். வைரன் "ஆம், சுவாமி வெகு பிரியமாக விருக்கிறேன்." என்றான்.

சுவாமியார்:—இப்போது இப்படிச் சொல்லிவிட்டுப் பிரிதொருகாலம் இம்மதத்தை மறுதலித்து விடுவாயோ?

வைரன்:— ஒருபோதுமப்படிச் செய்யமாட்டேன். சுவாமி, ஓரே பிரதிக்கினையாகவே யிருக்கிறேன்.

சுவாமி:—நீ கலியாணமும் இப்போதே செய்து கொள்ளேன், பிற்பாடு கலியாணஞ் செய்துகொள்ள வேண்டிய காலத்தில் வேதத்திலிருந்து வழுவிவிட்டாலுஞ் விடுவாயே,

இதைக் கேட்டதும் வைரன் வெட்கத்தால் நாணித் தலை குனிந்தான் "அப்படி ஒருபோதும் செய்யமாட்டேனென்று தங்களிடம் உண்மையாகச் சொல்லுகிறேன் சுவாமி." என்று மெல்லிய குரலில் வைரன் சொல்லிமுடியு முன்னமே "குட்ஈவினிங் பாதர்" என்ற ஓர் மங்கையின் மெல்லிய குரல் கேட்டது. குருவானவரும் "மாலை வந்தனம் மிஸிஸ் ..................." என்று சொல்லி இவர்களை நோக்கி "வேறு ஏதோ முக்கிய விஷயமாகப் பேசவந்திருக்கும் அந்தத்துரைசானியிடம் நான் பேசவேண்டியிருப்பதால் இன்னொரு நாளைக்கு வாருங்கள்" என்று சொல்லவும் வைரனும் அருளாந்தும் தங்களிருப்பிடத்திற்கு திரும்பினர், கோவில் பிள்ளையும் குருவுடன் நின்றுவிட்டார்.

மேற் கூறிய சம்பவங்கள் நிகழ்ந்து மூன்று நாட்சாயரக்ஷை வைரனும் அருளாந்தும் குருவானவரிடஞ் சென்றார்கள். அன்று குருவானர் வைரனின் மனதைச் சோதிக்கப் பாவசங்கீர்த்தன மென்ற தேவத் திரவிய அநுமானத்தைப் பற்றிச் சொல்லிப் பாவசங்கீர்த்தன மந்திரந் தெரியுமாவென்று கேட்டார். இந்த ஜெபத்தைத் தவிர மற்றப் பிரதான மந்திரங்கள் மட்டுங் கற்பிக்கப் பட்டிருந்தானதைலால் இது தெரியாதென்றுரைத்தான் கோவில் பிள்ளையும் அவனைப் பார்த்து சர்வத்துக்கும் வல்ல சர்வே.........இந்த மந்திரம் தெரியாதோ வென்று கேட்டுத் தெரியாதெனப் பதில் வரவே இரண்டு தடவைச் சொல்லிக்கொடுத்து இந்த மந்திரத்தைக் கற்றுக் கொண்டு கூடிய சீக்கிரம் அடுத்த ஞாயிற்றுக்கிழமை வாவென்றும் அப்போது நீ பாவசங்

கீர்த்தனஞ் செய்து கிறீஸ்துவனாகி விட உனக்குத் தைரிய முண்டோ வென்று குருவானவர் சோதித்துப் பார்ப்பார். நீ கிறிஸ்துவனாக ஞானஸ்நானமும் பெற்றுக் கொள்வாயென்றுரைத்து அனுப்பிவிட்டார்கள்.

வீட்டுக்கு வந்த வைரணிடம் சங்கதிகளை யெல்லா மறிந்து கொண்டு மந்திரங் கற்றுக் கொடுத்த வாலிபர் "நீ தைரியத்தை யிழக்காதே. இரண்டே தினத்தில் நீ கற்றுக் கொள்ளக் கூடுமென்றுரைத்து அவ்விரண்டு தினத்திலும் அடிக்கடி ஷெ மந்திரத்தைக் கற்றுக் கொடுத்துத் தெளி வாய்ச் சொல்லும்படியும், அம்மந்திரத்தின் கருத்தையுந் தெளிவாயறிந்து கொள்ளும்படியுஞ் செய்துவிட்டார். இந்தச் சமயம் கண்டு மேற்றிராணியாண்டவருமந்த பங்குக்கு வந்திருந்ததால் உறுதிப் பூசுதலும் பெற்றுக் கொள்ளச் செய்யலாமென்று அருளாந்து சொல்லிக் கொண்டிருந்தான்.

ஆனால் வைரனுக்கும் அருளாந்துக்குங்கடினமானவேலை தங்கள் வேலைத்தலத்திலிருந்ததால் அதன் பிறகு கூடிய சீக்கிரம் கோவிலுக்குக் குருவானவரிடம் போகக் கூடாமலிருந்தார்கள்.

## 7-ம். அத்தியாயம்.

## ஞான தீட்சை

அடுத்த ஞாயிற்றுக்கிழமை வைரனுக்கு ஜெபங்களும் தமிழ் படிக்கவுங் கற்றுக் கொடுத்தவாலிபர் நூவரெலியா கோவிலுக்குப் போயிருந்தார். பூசை ஒன்பது மணிக்குத் தான் தொடங்குவதாலும் 8 மணிக்கே அங்கே போய்ச்

சேர்ந்து விட்டாராதலாலும் வைரன் விஷயத்தைப் பற்றி குருவானவரிடம் பேசலாமென்றெண்ணி தோட்டத்திலு லாவிக் கொண்டிருந்த குருவையணுகிச் செய்யவேண்டிய ஒழுங்குபோல் வணக்கஞ்செய்து "சுவாமி சென்றவாரங் களில் தங்களிடம் வந்த வைரன் என்ற ஓர் அஞ்ஞானி வாலி பனையும் அருளாந்து என்ற கிறீஸ்துவனையும் பற்றிய சங் கதிகளை அறிவீர்களல்லவா?" என்றார். அதற்கு குருவா னவர் "ஆம், ஆம் தெரியும்." என்றார்.

வாலிபர்:—அந்த வைரனென்போன் நம் கிறீஸ்துமதத் தின்மேல் வெகுவாய்ப் பற்றுதலுடையவன் சுவாமி. கிறிஸ் துவனுகிவிட வெகுவா யாசிப்பதாகவுரைத்து அடிக்கடிகேட் டுக்கொண் டிருந்தானுதலால் நான் அவனுக்கு வேண்டிய ஜெபங்களைக் கற்றுக் கொடுத்து இன்னும் நம்வேதத்தைப் பற்றியும் வேண்டியவைகளைச் சொல்லிக் கொடுத்திருக் கிறேன்."

குரு:—ஆம் அவ்விருவரும்சிலதடைவைகள்என்னிடம் வந்தார்கள். ஒருதடவை அவன் மனதை பாவசங்கீர்த் தனத்தால் சோதிக்கலா மென்றெண்ணி பாவசங்கீர்த்தன மந்திரங் கேட்டதில் அது அவனுக்குச் சொல்லிக் கொடுக் கப் படாமலிருந்தது.

வாலி:—ஆம் சுவாமிஅம்மந்திரத்தையும்அடுத்தஇரண் டுதினங்களிலேயே அவனுக்குப் பாடஞ் செய்துவிட்டேன். மேலும் அம்மந்திரத்தைப்பற்றி அவனுக்கு வியாக்கியான முஞ்செய் திருக்கிறேன்.

குரு:—வெகுநல்லது. ஆனாலின்னொருசங்கதி தம்பி! அதென்னவெனில் எனக்குத் தமிழ்ப் பாஷையும் தமிழரின் போங்குகளுமதிகந் தெரியாதாதலால் எல்லா விஷயங்களைப் பற்றியும் நீர் நம் கோவில் பிள்ளையுடன் கலந்தாலோசித்து அக் கோவிலில் பிள்ளையுந் தமிழராயிருப்பதால் வைரனின் போங்குகளைக் கவனித்து ஞானஸ்நானங் கொடுத்துவிடலா மென்று எனக்குஞ் சொல்லுவாராகில் அந்த நேரத்திலேயே அவ்வைரனுக்கு ஞானஸ்னானங் கொடுத்துவிடலாமென்று அச்சிங்களக் குருவானவர் இந்தவாலிபரிடம் ஆங்கிலத்தில் சம்பாஷித்துக் கொண்டிருந்து முடித்தார். இந்தவாலிபரும் அப்படியே யாகட்டும் என்று சொல்லி குருவான வருக்கு நமஸ்காரஞ்செய்து பூசை துவக்கும் நேரம் நெருங்கி விட்ட தால் கோவிலினுட் சென்றார்.

பூசை முடிந்த பிறகு மேற்படிவாலிபர் கோவில் பிள்ளை யைக் கண்டு பேசவுத்தேசித்து அவரைத் தேடிச்சென்று அவரிடம் "ஐயா சின்னக்காட்டுத்தோட்டத்திலிருந்து இரண்டு வாரங்களாய் இங்கு வந்தவைரன், அருளாந்து என்ற இருவ ரையும்பற்றி யறிவீரல்லவா?" என்றார்.

கோவில் பிள்ளை:—ஆம், ஆம் எனக்கு நன்றாய்த் தெரியும். வைரனுக்கு கிறீஸ்துவனாகிவிட ஆசையா யிருப் பதால் உம்மால் மந்திரங் கற்றுக் கொடுத்து ஆயத்த மாயிருப்ப தாகவுந் தெரியும். ஆனால் அவனுக்குத் தெரியாமலிருந்த பாவசங்கீர்த்தன மந்திரத்தைச் சீக்கிரங் கற்றுக்கொண்டு ஞாயிற்றுக்கிழமையாகிய இன்றைக்குத்தா னே வரச்சொல்லி யிருந்தேன். அந்த அருளாந்து அவ னுக்கு ஞானத்தந்தையாக வருகிறேனென்றுஞ் சொல்லி யிருந்தானே, எங்கே அவர்கள் இன்று வரவில்லையா?

வாலிபர்:— இல்லை அவர்கள் வரவில்லை. அவர்களுக்கு அதிக வேலை யென்றாகிக்கிறேன். மேலும் அன்று பாவ சங்கீர்த்தன மந்திரந் தெரியாமலிருந்ததால் அதைக்கற்றுக்கொண்டு நேற்றுக்கு முந்தின நாளாகிய வெள்ளிக்கிழமை வரச்சொன்னதாகச் சொன்னார்கள். ஆனால் அன்றைய தினத்திலிருந்து வேலை யதிகத்தால் வரக்கூடாமலிருக்கிறார்கள் போலும்.

கோவி: — "இல்லை ஐயா, உமக்குத் தெரியாதா? ஞாயிற்றுக்கிழமை கடைசிப் பூசைக்குப் பிறகு தானே ஞானஸ்னானங் கொடுக்க ஏற்றசமயம். வெள்ளிக்கிழமை வரும்படியாகச் சொல்லவில்லையே. நான் ஞாயிறன்றாகிய இன்று தினந்தான் வரும்படியாகச் சொல்லியிருந்தேன்."

வாலி— "சரி ஐயா. போனது போகட்டும். இனிக் காரியத்தை பார்ப்போம். அடுத்த ஞாயிற்றுக்கிழமை யாகிலும் கட்டாயம் வைரனுக்கு ஞானஸ்னானங் கொடுத்துவிட ஏற்பாடு செய்வோம்" என்று சொல்லி பூசைக்கு முன் குருவானவரிடம் சம்பாஷித்ததைப் பற்றியுஞ் சொன்னார்.

கோபு:—"அது சரிதான்ஐயா. சுவாமியாருக்கு உண்மையில் தமிழர்களின் அனுபோகந் தெரியாது. அதெல்லாம் நான்கூறி விடுகிறேன். வைரனின் பேச்சையும் போக்கையும் கவனிக்கும் போது அவன் மேலு மேலும் பற்றுதலுடன் வேதத்தில் ஸ்திரப்படுவானே யொழிய வேதத்தைப் புறக்கணியானென்பது விளங்குகிறது. நீங்களெப்படி எண்ணுகிறீர்கள்" என்றார்.

வாலி:— என்ன ஐயா நானும் அவனைநெருங்கிப் பழகியதில் உங்களைவிட தீர்க்கமான அபிப்பிராயங் கொண்டிருக்கிறேன். அவன் சரித்திரங்களை ஒருவாறு அறிந்த நான் ஒருபோதும் அவனைச் சந்தேகியேன்.

கோவி:— நல்லது ஐயா சென்றுவாருங்கள். அடுத்த ஞாயிறன்று கட்டாயம் அவ்விருவரையு மனுப்புங்கள். ஞானஸ்நானம் கொடுக்க யாதொருதடையில்லை யென்று எல்லாச் சங்கதியையும் நான் சுவாமியாரிடங்கூறி விடுகிறேனென்றுதான் அருந்தியிருக்கும் மதுவின் வாசனைவெளியில் நன்றாய் கிளம்பும்படிவாயைத்திறந்து கூறிவிட்டுச் சென்றார்

வாலிபரும் அக்குடியரின் துர்நாற்றத்திலிருந்து விலகியதே போது மென்று கருதி இதைப்பற்றி மனதில் எண்ணிக்கொண்டே வழிநடந்து தமதில்லமடைந்தார். இதன் பிறகு அருளாந்தையும் வைரனையுங் கண்டு எல்லாச் சங்கதிகளையுங் கூறினார். இதைக்கேட்ட வைரனும் அருளாந்தும் "இல்லை ஐயா அக்கோவில் பிள்ளை அன்றையதினம் நன்றாய் மது அருந்தியிருந்தார். அந்த வெறியில் தான் பல மாதிரி எங்களிடங்கூறி விட்டு இப்போது வேறு மாதிரி சொன்னதாக உம்மிடஞ் சொல்லி யிருக்கிறார். இது விந்தையே" யென்றார்கள். இன்னுமிவர் பிள்ளையின் ஊழல்களையுமெடுத்துக் கூறிப்போனார். போகவிட்டுப் புறஞ்சொல்லும் குற்றத்திற்கும் "குற்றமும் பாராட்டி திரியும்" குற்றத்திற்கும் என்னை ஆளாக்கிக் கொள்ளாமலிருக்க விரும்புகிறேனானதால் இன்னும் சில இதைப்பற்றிக் கூறுவதை வாசகர் என்னை மேற் சொன்னக் குற்றத்திற்காளாக்காமல் வாசித்துணரவேண்டுகிறேன்.

3-ம் அத்தியாயம்

## முடிவுரை.

சாதாரணமாய் நம் கோவில்களில் கோவில்பிள்ளை உபதேசி என்றசிலபெயர்களால் இக்கோவிலூழியர்களை அழைக்கிறோம். இன்னவர்களின் உத்தியோகமென்ன? தேவஸ்தலமாகிய ஆலயத்தில் சிலவேலைகளைச் செய்யவும், விசேஷமாய் ஆராதனை வேளைகளில் ஜெபஞ் சொல்லவும், இன்னும் கிறீஸ்துவர்களுக்கும் தம்மை அறிந்த புரசமயத்தவர்களுக்கும் வேத சரித்திரங்களை வியாக்கியானம் செய்து அன்னவர்களுக்குத் தம்முடைய நற்கிரிகைகளால் முன் மாதிரிகையாய் நடந்து காண்பிக்க வேண்டியவர்களல்லவா? இப்படி இருக்க அவர்களில் சிலர் பாழும் மதுபானத்தை அருந்திவிட்டு கோவில்களில் செய்யும் அட்டூழியங்களுக்கு கணக்குண்டா? நானிப்படிச் சொல்வதால் பொதுவாய் எல்லாக் கோவில்பிள்ளை உபதேசிமார்களைக் குறைகூறி அவமானப்படுத்துகிறேனென் றெண்ண வேண்டாம். வெகுநற்குணமுடைய கோவில் பிள்ளை உபதேசிகள் பலரிருக்கின்றனர். இன்னவர்களின் பெயரைக்கெடுக்க இவர்களினூடே சிலபோலிக் கோவில்பிள்ளை உபதேசிகள் திரிகின்றனர். இப்பேர்ப்பட்டவர்களுக்கு கடைசிநாளில் கர்த்தரிடம் கணக்குக்கடினமாயிருக்கு மென்பதை நினைப்பூட்டுகிறோம்.

முன்கூறிய அத்தியாயத்தி னிறுதியிலும் இவ்வத்தியாயத்து பக்கத்திலும் கோவில் பிள்ளைகளைப்பற்றி விசேஷமாய் இச்சரிதையில் தோன்றிய கோவில் பிள்ளையைப்பற்றி உள்ளதை உள்ளவாறு சொல்லிவிட்டதற்கு என்மேல்கோபப்படக்கூடாதென்று தெரிவித்துங் கொள்ளுகிறேன். என் சுபாவமது. நிற்க,

ஆறு நாட்களுங்கடந்தன. ஏழாந்தினம் ஞாயிற்றுக்கிழமை (3 5 1925) மேமீ மூன்றாந் தெய்தி நுவெரெலியா அர்ச். சவேரியார் தேவாலயத்தில் கடைசிப் பூசைமுடிந்த பிறகு அன்றுதினம் திருச்சிலுவை கண்டெடுத்தத் திருவிழா வானதால் வெகு நாட்களாய்க் கிறீஸ்துவனுகிவிட ஆவல்கொண்டு அச்சுபதினத்தை யெதிர்பார்த்துக் கொண்டிருந்த வைரனுக்கு அவ்வஞ்ஞானப்பெயரைமாற்றி "ஜோன் குரூஸ்" (சிலுவை நாதன்) என்னும் பெயரைக் கொடுத்து அக்கோவில் உதவிக்குரு (Rev. Fr. Robet)ராபட் என்பார் ஞானதீட்சை கொடுத்தார். அநுளாந்தும் அவன் மனைவியும் ஞானத்தந்தை தாயாகவிருந்தனர்.

இச்சரிதையின் சங்க்ஷேபத்தை யான் எழுதியது என்திறமையைக் காட்டி நானும் புஸ்தகங்கள் எழுதுகிறே னென்ற தற்பெருமைக்குமல்ல, தற்புகழ்சிக்காகவுமல்ல. மேலும் இக்கதையில் கூறிபிருக்கிறபடி வைரனின் உள்ளத்தில் சாம்பலுள் உள்ள நெருப்பைப் போன்ற விசுவாசத்தைத் தங்களின் போதனையால் பிரகாசிக்கச் செய்துவிட்ட மரிய தாஸவர்களின் குடும்பத்தார்களைப் புகழ்ச்சிக் கிடமாக்கவுமல்ல. இப்படியேன் கடைசி வாக்கியத்தைச் சொன்னேனென்றால் இச்சரிதையைப் புத்தகமாகப் பிரசுரிக்குமுன் பேப்பரில் எழுதிவந்தபொழுது ஷெயார் "தன்னைப் புகழ்ந்து கூற வேண்டாம்; வியாஸம் இக் கருத்துகொண்டதாகிறது" என்று எமதிடம் முறையிட்டார்.

ஆனால் என் இச்சரிதைச் சுருக்கத்தை எழுதினேனென்றால் கிறீஸ்துவர்கள் புறசமயத்தவரை தம்வேதத்தில் சேர்ந்து கொள்ளும்படி வற்புறுத்துவதில்லை யென்றும் இவர்க

ளுக்கு கிறீஸ்துசமயத்தில் தானகவே பற்றுதலுண்டாகி இப்பேர்ப்பட்டவர்களைக் கிறீஸ்துநாதரே ஆட்கொண்டுவிடு கிறாரென்றும் இந்தப் பற்றுதல் ஆட்கொண்டவர் மனதில் வேர் ஊன்றி எவராலும் அசைக்கப்படாமல் தழைத்து விருட்சமாகி அன்னவர் மனதில் கிறீஸ்துசமயத்திலுள்ள உண்மையையும் பிறசமயத்திலுள்ள பொய், வீண்கற்பனை களையும் உணர்த்தி எந்தக் காற்று மழைக்கும் அசையாமல் நின்றுவிடுகிறதென்றும் பிறமதஸ்தர் உணர்வதற்கே என்ச.

---